**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.7/2025 ல்**

**அசல் வழக்கு எண்.15/2018**

1. C.ஜெயலெட்சுமி,
   க/பெ சந்திரகுமார்.

2. S. விஜயலெட்சுமி,
   க/பெ சண்முகம் ...மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. P.பழனிகுமார் மற்றும் 12 நபர்கள். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

14. B.ராணி,
த/பெ லேட் பாலசுப்ரமணியன்

15. B, ஸ்ரீகாந்த்,
த/பெ லேட் பாலசுப்ரமணியன்.

16. B. பிரியா,
த/பெ லேட் பாலசுப்ரமணியன் ... மனுதாரர்கள்/இறந்த
3 ம் பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனுவானது, கடந்த 25.11.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.சங்கரன் அவர்களும், 1,2 எதிர்மனுதாரர்/1,2 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சிவசங்கரநாராயணன் அவர்களும் முன்னிலையாகியும், 4,5

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு பா.வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பாளர்களாக்கப்பட்டும், மனு எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 6 விதி 17–ன் கீழ் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கை பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த வழக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் 08.01.2024 அன்று 3ம் பிரதிவாதி, அவரது மனைவி, மகள்கள் மற்றும் மகனை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டதாகவும், எனவே, அவரது வாரிசுகளை கூடுதல் தரப்பினர்களாகச் சேர்க்க இ.ம.எண்.6/2024 என்ற மனு செய்து, அந்த மனுவானது 19.08.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், 20.06.1974 அன்று 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தாகவும், அது பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு, அதில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அவரது வாரிசுகளுக்கும் இந்த சொத்தில், எந்த உரிமையும் இல்லை என்றும், வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் இதுபோன்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

4. இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இந்த வழக்கு பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தபோது, 3ம் பிரதிவாதி இறந்து விட்டதாகக் கூறி, அவரது வாரிகளை சேர்க்கக் கோரி இ.ம.எண்.6/2024 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, 19.08.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு, பதிவு செய்த விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளாரா? இல்லையா? என்பது குறித்தும், அவரது வாரிசுகளுக்கு சொத்தில் உரிமை உள்ளதா? இல்லையா? என்பது குறித்தும், தற்போது இந்த மனுவில் முடிவு செய்ய இயலாது, எனவே, இறந்தவரின் வாரிசுகளை வழக்கில் சேர்க்கக் கோரி தாக்கல்

செய்த இ.ம.எண்.6/2024 என்ற மனு 19.08.2025 அன்று அனுமதிக்கப் பட்டுள்ளதால், அது தொடர்பான திருத்தங்களை வழக்குரையில் திருத்தம் செய்ய தாக்கல் செய்யப்பட்ட, இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது எனக் கருதி, இந்த மனு அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

6. **முடிவாக,**

இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டடது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.12.04 13:55:21 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.12.04 13:55:28 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**